## பயன்பாட்டு முறை
## நூலகத்திற்கு உங்களை வரவேற்கின்றோம்

உங்கள் வருகையில் நூலகம் மகிழ்ச்சி
அடைகிறது. அலுவலக நேரத்தில் அனைத்து
ஊடகங்களையும் நீங்கள் பயன்படுத்திக்
கொள்ளலாம்.

**அலுவல் நேரம்**

| | |
|---|---|
| திங்கள் | 14 – 18 மணி |
| செவ்வாய் | 10 – 18 மணி |
| புதன் | 10 – 18 மணி |
| வியாழன் | 10 – 19 மணி |
| வெள்ளி | 10 – 18 மணி |
| சனி | 10 – 16 மணி |

**ஒருங்கிணைந்த நூலகம் என்பதென்ன?**
ஒருங்கிணைந்த நூலகமானது புத்தகங்கள்
மற்றும் இதர ஊடகங்களை அல்பேனிய, ப
ின்னிஷ், பிரெஞ்சு, இத்தாலி, குரேசிய,
போர்த்துக்கேய, ரஷ்ய, சேர்பிய, ஸ்பானிய
மற்றும் துருக்கிய மொழிகளில் இரவல் அள
ிக்கிறது.
கற்றல் உதவி, மொழிக் கல்வி, இரு மொழிப்
படைப்புகள் மற்றும் எளிய நடையில்
அமைந்த ஜேர்மன் நூல்கள் பிற மொழி
பேசுபவர்களின் ஒருங்கிணைப்பை ஊக்குவ
ிக்கிறது. பட அகராதிகள், கற்பிப்பதற்கான
சாதனங்கள் மற்றும் நாட்டுப் பின்னணிப்
படைப்புக்கள் ஆகியவை தாய்மொழிப்
பாடங்கள், பன்மொழிப் பாடங்கள் மற்றும்
அனைத்துலகக் கல்விகளுக்கு உதவுகின்றன.
ஒருங்கிணைந்த நூலக வசதி பிற மொழி
நூல்களை வாசிக்க விரும்பும்
குழந்தைகளுக்கும், இளையோருக்கும்
அதேபோல் அவர்களின் பெற்றோருக்கும்,
ஆசிரியருக்குமாக உருவாக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த நூலகம் St. Galler
Freihandbibliothek-ஆல் நிர்வகிக்கப்படும்.
இது St. Galler Freihandbibliothek மற்றும்
Libra Forum இணைந்து செயலாற்றும் த
ிட்டமாகும்.

### 1. இரவலளிப்பவை

- புத்தகங்கள்
- பத்திரிகைகள்
- ஒலிநாடா, குறுந்தகடு
- DVD மற்றும் ஒளிநாடா
- CD-ROM

### 2. இரவலளிப்பதற்கான விதிமுறைகள்

- 50 அல்லது 70 பிராங்குகள் வருடச் சந்தா செலுத்தி ஆகக் கூடியது 10 புத்தகங்களையும் 10 இதர ஊடகங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
- குழந்தைகளுக்கும், 18 வயதுக்குட்பட்ட இளையோருக்கும் கட்டணமின்றி இரவலளிக்கப்படும்.
- புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் குறுந்தகடு இலவசம்.
- DVD / Video / CD-ROM ஆகியவற்ற ிற்கு தலா 3 பிராங்குகள் கட்டணம் அறவிடப்படும்.
- நீங்கள் ஒரு ஊடகத்தை இரவல் வாங்க முன் கூட்டியே கோரும் பட்சத்தில் 3 பிராங்குகள் செலுத்த வேண்டும். அவ்வாறு உங்களுக்கென ஒதுக்கிய ஊடகம் தயார் நிலையில் இருப்பின் எழுத்து மூலம் அறியத் தரப்படும்.
- பதிவு செய்வதற்கு பெயர், முகவரி மற்றும் புகைப்படத்துடன் கூடிய செல்லுபடியாகும் அடையாள அட்டை அவசியம்.
- தயவுசெய்து இரவலாகப் பெற்ற ஊடகங்களைக் கவனமாகப் பயன்படுத்தவும். தொலைந்தாலோ, அல்லது சேதம் ஏற்பட்டாலோ அதற்குண்டான வ ிலையை நூலகம் வசூலிக்கும்.

### 3. திருப்பிக் கொடுத்தல்

- உங்கள் ரசீதில் உள்ள திகதி வரை அந்த ஊடகத்தை நீங்கள் பயன்படுத்தலாம்.
- தயவுசெய்து குறித்த திகதிக்குள் இரவல் வாங்கிய ஊடகங்களைத் த ிருப்பிக் கொடுங்கள் அல்லது நீடிப்புப் பெறுங்கள். இல்லையெனில் நூலகம் அதற்கு ஒரு கட்டணம் அறவிடும்.

எங்களின் சேவை உங்களுக்குப் பிடித்த
ிருக்கும் என நம்புகிறோம். இது பற்றி
உங்கள் தெரிந்த மற்றும் நட்பு வட்டங்கள
ிலும், சங்கங்களிலும் தெர
ியப்படுத்துவீர்களானால் மிகவும் மகிழ்ச்ச
ியடைவோம்.

உங்கள் வருகை குறித்து மிக்க மகிழ்ச்ச
ியடைகிறோம்!

**இத்திட்டத்திற்கு ஆதரவளிப்பவர்கள்:**

- Fachstelle Gesellschaftsfragen Stadt St. Gallen
- Kulturförderung Kanton St. Gallen
- Integrationskredit des Bundes (EKA Eidgenössische Ausländerkommission / BMF Bundesamt für Migration)
- VBOGS Verein Bücher ohne Grenzen Schweiz

**St.Galler Freihandbibliothek**
Katharinengasse 11, Postfach 139
9004 St. Gallen
Tel. 071 223 6023 / Fax 071 223 6024
info@freihandbibliothek.ch

**www.freihandbibliothek.ch**